முழுப் பதிப்புரிமையுடையது.

SRI LANKA

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – 2025 சனவரி

## (303) நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும்

(Financial Controls & Audit)

2025-02-01
பிற்பகல்
[01.45 – 05.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

பக்கங்கள் : 08
வினாக்கள் : 09

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த* ***மொழி மூலத்திலேயே விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் ஏதேனும் எடுகோள்களை மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

**Sewana Homes (Pvt) Ltd.** என்பது இலங்கையில் சிறிய அளவு தொடர்மாடிக் குடியிருப்புகளை நிருமாணித்து, விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ள ஒரு கம்பனியாகும். கடந்த இரண்டு நிதி ஆண்டுகள் கம்பனிக்கு மிகவும் கடினமான காலமாக இருந்தது. எவ்வாறாயினும், நடப்பு ஆண்டில், கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பூர்த்தி செய்யப்பட்டிருந்த சில வீட்டு அலகுகளை கம்பனியால் விற்பனை செய்ய முடிந்திருந்தது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

**Sewana Homes (Pvt) Ltd.** ஐ எதிர்மறையாகப் (negatively) பாதிக்கக்கூடிய மூன்று (03) பொருளாதாரக் காரணிகளை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 02

**Coco PLC** தென்னந் தோட்டங்களை வைத்திருப்பதுடன் அது உயர் தரமான தேங்காய் எண்ணெயை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளது. சொந்தத் தோட்டங்களில் தேங்காய் உற்பத்தி போதுமானதாக இல்லாதபோது நன்கு உலர்ந்த தேங்காய்கள் கொள்வனவும் செய்யப்படுகின்றன.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட SLS தரச் சான்றிற்கான சோதனையில், கடந்த மாதம் கொள்வனவு செய்யப்பட்ட உலர்ந்த தேங்காய்களில் நச்சுப் பூஞ்சை இருந்ததும் இதன் விளைவாக கையிருப்பில் உள்ள எண்ணெயிலும் சந்தைக்கு வழங்கப்பட்ட எண்ணெயிலும் நச்சுப் பூஞ்சைத் தாக்கம் காணப்பட்டதும் கண்டறியப்பட்டது. இது உணவுப் பாதுகாப்பு விதிமுறைகளை மீறுவதால் தரம் குறைந்த எண்ணெய் உற்பத்தி பற்றி நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபைக்கும் பொதுச் சுகாதார அதிகாரசபைக்கும் தெரியப்படுத்த வேண்டிய கடப்பாடு இருப்பதுடன் இது பற்றி ஊழியர்கள் அறிந்திருப்பதால் இந்தச் செய்தி ஊடகங்களில் பரவுவதற்கும் அதிக வாய்ப்புள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

மேற்படி விவரணத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள இரண்டு (02) உள்ளக இடர்களை (internal risks) **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 03

கணக்காய்வு ஈடுபடுத்தலொன்றை மேற்கொள்ளும்போது, கணக்காய்வாளர் பல்வேறு வகையான கணக்காய்வு நடைமுறைகள் ஊடாக கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்கிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்காக கணக்காய்வாளரால் ஆற்றப்படக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளின் இரண்டு (02) வகைகளை, ஒவ்வொரு வகைக் கணக்காய்வு நடைமுறைக்கும் ஒவ்வொரு உதாரணம் தந்து **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 04

**சுசந்த** என்பவர் ஒரு தொழில்சார் தகைமையைக் கொண்டிருப்பதுடன் அவர் தனது பயிற்சிச் சான்றிதழுடன் **S & A அசோசியேட்ஸ்** என்ற ஒரு கணக்காய்வு நிறுவனத்தைத் தாபித்துள்ளார். இந்தக் கணக்காய்வு நிறுவனம் 2024 ஆம் ஆண்டில் சில சேவைநாடுநர்களின் வெளிவாரியான கணக்காய்வாளராக நியமனம் பெற்றிருந்தது. நிறுவனத்தில் தரக் கட்டுப்பாடுகளைத் தாபிப்பதன் முக்கியத்துவம் பற்றியும் ஈடுபடுத்தல்களை மேற்கொள்ளும்போது தர நியமங்களைப் பேணுவதன் முக்கியத்துவம் பற்றியும் **சுசந்த** தனது ஊழியர்களிடம் தெரிவித்துள்ளார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) தரக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றின் இரண்டு (02) கூறுகளை (elements) **அடையாளங் காண்க.** (02 புள்ளிகள்)

(b) ஈடுபடுத்தல் செயலாற்றுகையின் தரத்தின் மாறாத் தன்மைக்காக கணக்காய்வு நிறுவனத்தால் கவனிக்கப்பட வேண்டிய மூன்று (03) விடயங்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# பகுதி B

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

ABC Construction (Pvt) Ltd. (ABC) இன் வெளிவாரிக் கணக்காய்வின் கணக்காய்வு மேற்பார்வையாளர் நீங்கள் ஆவீர்கள்.

கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரிக்கும்போது 2024 மார்ச் 31 இலான ABC இன் வரைவு நிதி நிலைக் கூற்றில் கீழ்வரும் மீதிகள் உள்ளடக்கப்பட்டிருந்ததை நீங்கள் அவதானித்துள்ளீர்கள்.

**2024 மார்ச் 31 இல்**

| | ரூபா |
|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - முன்கொணரற் பெறுமதியில் | 4,190,360 |
| நடைமுறைச் சொத்துகள் | 11,102,170 |
| **மொத்தச் சொத்துகள்** | **15,292,530** |
| குறிப்பிடு மூலதனம் | 2,000,000 |
| 2023 ஏப்ரல் 01 இல் திரண்ட நட்டங்கள் | (7,122,460) |
| ஆண்டிற்கான நட்டம் | (1,125,400) |
| நடைமுறைப் பரிப்புக்கள் | 21,540,390 |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **15,292,530** |

ABC இன் நடைமுறைச் சொத்துகளில், ABC கம்பனியின் அதே பணிப்பாளர்களையும் அதே பங்குதாரர்களையும் கொண்ட BCC Construction (Pvt) Ltd. (BCC) இற்கு வழங்கப்பட்ட ரூபா 10 மில்லியன் கடன் உள்ளடங்குகிறது.

நிருமாணத் துறையில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக கடந்த மூன்று ஆண்டுகளில் காணப்பட்ட செயற்பாட்டு நட்டங்களை ABC அறிக்கையிட்டுள்ளது.

ரூபா 300 மில்லியனுக்கும் மேல் பெறுமதியுள்ள ஒரு பெரிய செயற்றிட்டத்திற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளதால், 2025 மார்ச் 31 இல் முடிவடையும் நிதியாண்டில் ஒரு பெரிய இலாபத்தை ஈட்டுவதற்கு ABC எதிர்பார்த்துள்ளதாக ABC இன் பணிப்பாளர்கள், உங்கள் கணக்காய்வுப் பங்காளரிடம் தெரிவித்துள்ளார்கள்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) ABC Construction (Pvt) Ltd. இனால் பயன்படுத்தப்படும் தொடர்ந்தியங்கும் என்ற எடுகோள் பற்றிச் சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய இரண்டு (02) நிலைமைகள் (conditions) / நிகழ்வுகளை (events) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) BCC இற்கு வழங்கப்பட்ட கடன் தொடர்பான கணக்காய்வில் நீங்கள் மேற்கொள்ள வேண்டிய மூன்று (03) கணக்காய்வு நடைமுறைகளைக் (audit procedure) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) வெளிப்படுத்தப்படாத தொடர்புடைய தரப்பினரின் ஊடுசெயல்களை கணக்காய்வாளர் கண்டறிய முடியாதிருக்கக்கூடிய ஓர் இடர் காணப்படும் மூன்று (03) சந்தர்ப்பங்களை **அடையாளங் காண்க.**

(03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

**Travelex Ltd.** என்பது வெளிநாட்டுச் சுற்றுப் பயணங்களை ஏற்பாடு செய்தல் மற்றும் விமானப் பயணச்சீட்டுக்களை விற்பனை செய்தல் ஆகியவற்றை மேற்கொள்ளும் பயண முகவர் வணிகத்தை நடத்திச் செல்லும் ஒரு கம்பனி ஆகும்.

***திசேரா குறுப்பு*** என்பவர் ***திசேரா அசோசியேற்ஸ்*** என்ற ஒரு கணக்காய்வு நிறுவனத்தின் ஒரு தனியான பயிற்சியாளர் ஆவார். இந்நிறுவனத்தின் தகைமைபெற்ற பட்டயக் கணக்காளரான ***சச்சின்*** 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **Travelex Ltd.** இன் சட்டநியதிக் கணக்காய்வின் கணக்காய்வு முகாமையாளராகப் பணியாற்றுகின்றார். சட்டநியதிக் கணக்காய்வு தற்போது நடைபெறுகிறது. 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் வருமான வரி ஏற்பாடு மற்றும் பிற்போடப்பட்ட வரி ஏற்பாடு ஆகியவற்றைத் தயாரிக்க கணக்காளருக்கு ***சச்சின்*** உதவி செய்ததால், முகாமையானது ***சச்சின்*** மற்றும் ***திசேராவுக்கு*** இந்தியாவுக்கான ஒரு சுற்றுப் பயணத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. நிறுவனத்தின் புதிய வரி வணிக வரிசையை (tax business line) ஊக்குவிப்பதே ***சச்சினின்*** நோக்கமாக இருந்தது. ***சச்சினும்*** **Travelex Ltd.** இன் கணக்காளரும் மதிய உணவுக்காகச் சந்தித்த வேளையில் புதிய வரிச் சேவைகள் பற்றி ***சச்சின்*** கணக்காளரிடம் சுருக்கமாகத் தெரிவித்தார்.

***நீங்கள் செய்ய வேண்டியவை :***

(a) மேற்படி விடயங்கள் தொடர்பில், அடிப்படை நெறிமுறைக் கோட்பாடுகளுடன் இணங்குவதற்கான இரண்டு (02) அச்சுறுத்தல்களை (threats) ***ஆராய்க.*** (06 புள்ளிகள்)

(b) மேலே குறிப்பிடப்பட்ட அச்சுறுத்தல்களைக் குறைப்பதற்கு / நீக்குவதற்கு ***திசேரா அசோசியேற்ஸ்*** இல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய நான்கு (04) நடவடிக்கைகளைக் (steps) ***குறிப்பிடுக.***

(04 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

***ஜயரத்ன ஹாட்வெயார் (பிரைவேட்) லிமிட்டெட்*** (*ஒரு கம்பனி*) என்பது வன்பொருள் உருப்படிகளை இறக்குமதி செய்வதிலும் அவற்றை உள்ளூர் முகவர்கள் ஊடாக விற்பனை செய்வதிலும் ஈடுபட்டுள்ள ஒரு கம்பனி ஆகும். நாட்டில் நிலவிய பாதகமான பொருளாதார நிலைமைகளுடன் கடந்த 2 வருட காலப்பகுதியில் இந்த வன்பொருள்களில் பெரும்பாலானவற்றின் விலைகள் வேகமாக அதிகரித்திருந்தன. மேலும் விலைகள் உயர்வடையும் என்ற எதிர்பார்ப்புடன், கம்பனியின் முகாமைப் பணிப்பாளரின் அறிவுறுத்தல்களின்படி, நிதி நிறுவனம் ஒன்றிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட இறக்குமதிக் கடன் (import loan) ஊடாக மேலதிகமாக ரூபா 125 மில்லியன் பெறுமதியான வன்பொருள் உருப்படிகள் இறக்குமதி செய்யப்பட்டன. இக்கடன் ஒரு வருடத்தில் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும்.

எவ்வாறாயினும், இந்த வன்பொருள் உருப்படிகளுக்கான தேவை மேலும் குறைவடைந்ததால், கடனை ஐந்தாண்டு வங்கிக் கடனாக மாற்றுமாறு கம்பனி வங்கியிடம் கோரியது. மேலும், இந்த உருப்படிகளின் உள்ளூர் விலைகள் வீழ்ச்சியடைந்தன.

2024 மார்ச் 31 இலான கம்பனியின் வரைவு நிதி நிலைக் கூற்றானது, இருப்பாக, கிரயத்தில் ரூபா 74,125,300/- பெறுமதியான வன்பொருள் உருப்படிகள் இருப்பதைப் பிரதிபலித்தது. எவ்வாறாயினும், இந்த உருப்படிகளின் நிகர தேறத்தக்க பெறுமதி (NRV) ரூபா 41,260,415/- என மதிப்பிடப்பட்டது. கம்பனியின் வரைவு நிதிக் கூற்றுக்கள் ரூபா 8,560,210/- இலாபத்தைக் காட்டியது.

அறிக்கையிடப்பட்ட செயலாற்றுகையைப் பாதிக்கும் எனவும் எதிர்கால வங்கியியல் வசதிகளைப் பாதிக்கும் எனவும் அனுமானிக்கப்படுவதால், வரைவு நிதிக் கூற்றுக்களில் உள்ள பெறுமானங்களை மாற்றுவதற்கு முகாமைப் பணிப்பாளர் இணங்கவில்லை.

நீங்கள் கம்பனியின் வெளிவாரிக் கணக்காய்வாளராக இருப்பதுடன் ரூபா 1.2 மில்லியன் என்ற வரிக்கு முன்னரான இலாபத்தின் அடிப்படையில் பொருண்மை மட்டம் தீர்மானிக்கப்படுகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **ஜயரத்ன ஹாட்வெயார் (பிரைவேட்) லிமிட்டெட்** இன் நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளரின் அறிக்கையின் கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு மேற்படி விவரணத்தில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை **மதிப்பிடுக.** (06 புள்ளிகள்)

(b) கணக்காய்வாளர் அறிக்கையின் நான்கு (04) பிரதான கூறுகளைக் (elements) **குறிப்பிடுக.**

(04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

**வரையறுக்கப்பட்ட டேஸ்ட் (தனியார்) கம்பனி** (*ஒரு கம்பனி*) உள்ளூர் சந்தைக்கான தேங்காய்த் தூள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள ஒரு கம்பனி ஆகும். தற்போது இக்கம்பனி தனது உற்பத்திப் பொருள்களை 10 சிறப்பங்காடிகளுக்கும் 100 முகவர்களுக்கும் வழங்குகிறது. கம்பனியில் 100 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணி புரிகின்றனர்.

கடந்த மாதம், குறைந்த தரம் காரணமாக கொள்வனவு செய்யப்பட்ட அனைத்து தேங்காய்த் தூள் பொருள்களையும் ஒரு சிறப்பங்காடி திருப்பி அனுப்பியது. இது குறித்து விசாரணை செய்யப்பட்டதில், பொருளின் மாதிரியானது தகைமைபெற்ற தர உறுதிப்பாட்டுப் பரிசோதகரால் பரிசோதிக்கப்படாது அது களஞ்சியக் காப்பாளரால் பரிசோதிக்கப்பட்டிருந்தமை தெரிய வந்தது.

பணிப்பாளர் சபையானது கம்பனியின் செயற்பாட்டுப் பயனுறுதித்தன்மை தொடர்பில் **வரையறுக்கப்பட்ட டேஸ்ட் (தனியார்) கம்பனி**யின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை மீளாய்வு செய்து, அறிக்கை சமர்ப்பிக்குமாறு உள்ளகக் கணக்காய்வு அணியைக் கோரியது.

உள்ளகக் கணக்காய்வு அணியினால் பின்வருவன அடையாளங் காணப்பட்டன :

- இருப்பு முகாமைத்துவ முறைமையானது இருப்புகளின் அளவுகளை மாத்திரம் உள்ளடக்கியுள்ளது. இதனால், உருப்படிகளை பொதுப் பேரேட்டுடன் இணக்கம் செய்ய முடியாது.
- இருப்பு மதிப்பீடுகள் கைமுறையாகப் (manually) பேணப்படுகின்றன.
- உள்ளகக் கணக்காய்வு அணி, வழக்கமான நடைமுறையாக முழு இருப்புகளினதும் பௌதிக ரீதியான சரிபார்த்தலை முன்னெடுத்தது. இதன்போது காலாவதியான தேங்காய்த் தூளின் ஒரு பெரிய அளவு, கம்பனியின் இருப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது.
- பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் இருந்த போதிலும், சில பொருள்கள் பதிவு செய்யப்படாத வழங்குநர் ஒருவரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், உற்பத்திக்காக வழங்கப்படுவதற்கு முன், மாதிரியானது பரிசோதிக்கப்படவில்லை.
- வழங்குநர்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளும்போது, சில கொள்வனவுக் கட்டளைகள் விலைப் பட்டியல்களுடன் (invoices) ஒத்துப் போகவில்லை.

**IT முறைமைகள் :**

கம்பனியானது நிலையான சொத்துக்கள் பதிவேடு, விலைப் பட்டியலிடல், சம்பளப் பட்டியல் முறைமை போன்ற பல்வேறு தொழிற்பாடுகளுக்காகவும் பல்வேறு IT முறைமைகளைப் பயன்படுத்துகிறது. இவை பொதுப் பேரேட்டு முறைமையுடன் ஒருங்கிணைக்கப்படவில்லை. ஒவ்வொரு நாளின் இறுதியிலும் கணக்குகள் நிறைவேற்றுநரால் பொதுப் பேரேட்டிற்கு தொகுதி உள்ளீடுகள் (Batch entries) இடப்படுகின்றன. பதிவுகளைப் பேணுவதற்கான ஒரேயொரு பயனர் கணக்கைப் (single user's account) பயன்படுத்தி நிதிப் பிரிவில் உள்ள அனைத்துப் பணியாளர்களும் சகல முறைமைகளையும் தரவுத் தளங்களையும் அணுக முடியும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **வரையறுக்கப்பட்ட டேஸ்ட் (தனியார்) கம்பனி**யின் நான்கு (04) பிரதான வணிகச் செயன்முறைகளை **அடையாளங் காண்க.** (04 புள்ளிகள்)

(b) (i) **வரையறுக்கப்பட்ட டேஸ்ட் (தனியார்) கம்பனி**யின் நான்கு (04) உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்களை **அடையாளங் காண்க.** (04 புள்ளிகள்)

(ii) மேலே (b) (i) இல் அடையாளங் காணப்பட்ட ஒவ்வொரு பலவீனத்தையும் சமாளிப்பதற்கு ஒவ்வொரு பரிந்துரை (recommendation) வீதம் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(c) **வரையறுக்கப்பட்ட டேஸ்ட் (தனியார்) கம்பனி** நடைமுறைப்படுத்தக்கூடிய மூன்று (03) கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(d) **வரையறுக்கப்பட்ட டேஸ்ட் (தனியார்) கம்பனி**யின் நிகழ்ச்சித் திட்டங்களில் அதிகாரம் அளிக்கப்படாத மாற்றங்களைத் தடுப்பதற்காக அல்லது கண்டறிவதற்காகப் பயன்படுத்தக்கூடிய பொதுக் கட்டுப்பாடுகளுக்கான நான்கு (04) உதாரணங்களைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(e) பொதுவாக எந்தவொரு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையிலும் குறைபாடுகளை ஏற்படுத்தக்கூடிய மூன்று (03) அறிகுறிகளைக் (signs) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

**Malcom PLC** (*ஒரு கம்பனி*) என்பது யப்பானிய டயர் பண்டக்குறியான (tyre brand) **'Rodex'** இற்கான ஒரேயொரு முகவராவார். இக்கம்பனியின் இந்த ஆண்டிற்கான கணக்காய்வாளராக **Apex NW** என்ற நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது. **Malcom PLC** இன் கணக்காய்வாளராக **Apex NW** தொழிற்படுவது இதுவே முதல் முறை ஆகும். இது பட்டியலிடப்பட்ட ஒரு பொதுக் கம்பனியாக இருப்பதாலும் இந்தக் கம்பனியில் **Apex NW** முதல் தடவையாக கணக்காய்வை மேற்கொள்வதாலும் இந்தக் கம்பனி அதிக இடர் மிகுந்ததாகக் கருதப்படுகிறது.

**விற்பனைகளும் கடன்பட்டோரும் :**

கணக்காய்வாளர் **Malcom PLC** இன் கடன்பட்டோர் கணக்கில் பதிவு செய்யப்பட்டுள்ள முதல் 10 நிறுவன வாடிக்கையாளர்களின் விற்பனை விலைப் பட்டியல்களைப் (invoices) பரிசீலித்து, அந்தக் கடன்பட்டோரிடம் இருந்து நேரடி உறுதிப்படுத்தல்களைப் பெற அவர்களுக்கு அழைப்பு விடுத்தார். 2024 மார்ச் 31 இல் ரூபா 6,450,000/- மற்றும் ரூபா 7,900,000/- ஆகிய மொத்த நிலுவைத் தொகைகளைக் கொண்ட இரண்டு (02) கடன்பட்டோர் தாங்கள் **Malcom PLC** இற்குச் செலுத்த வேண்டிய மீதிகள் எதுவும் இல்லை என்பதை உறுதிப்படுத்தியிருந்தனர்.

நிறுவன வாடிக்கையாளர்கள்; விற்பனைத் தரகைப் பெற்றுக்கொள்ள உரித்துடைய சந்தைப்படுத்தல் பணிப்பாளரால் (DM) நேரடியாக முகாமை செய்யப்படுகின்றனர். CEO உள்ளிட்ட முகாமையானது கடன்பட்டோர் மீதி காணப்படுகிறது என்பதை நியாயப்படுத்துகின்ற அனைத்து சம்பந்தப்பட்ட ஆவணங்களின் பின்புலத்துடன் விற்பனை நடந்துள்ளது என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர். மீதியானது ஓர் ஆண்டிற்குள் வசூலிக்கப்படாவிட்டால், அடுத்த ஆண்டில் முழு ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்பது கம்பனியின் கொள்கையாக உள்ளது. இணக்கம் செய்யும் செயன்முறையின்போது, கடன்பட்டோரால் மேற்கொள்ளப்பட்ட சில விலைப்பட்டியல்களின் தீர்ப்பனவானது கடன்பட்டோரின் தீர்ப்பனவுகளாக அன்றி விற்பனைகளாகப் பதிவு செய்யப்பட்டிருந்ததையும் விலைப்பட்டியல்கள், விற்பனைப் பேரேட்டில் நிகரொத்ததாக்கப்பட்டிருந்ததையும் (duplicated) கணக்காய்வாளர் கண்டுபிடித்தார். இது பற்றி CEO இற்குத் தெரிவிக்கப்பட்டது. இடரைக் குறைப்பதற்காக மேலதிக மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டது எனினும், வேறு பிரச்சினைகள் எதுவும் கண்டறியப்படவில்லை.

2024 மார்ச் 31 இலான கணக்காய்வு செய்யப்படாத நிதிசார் புள்ளிவிபரங்களின் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது :

| | ரூபா '000 |
|---|---|
| புரள்வு (Turnover) | 1,855,000 |
| வரிக்கு முன்னரான இலாபம் | 326,000 |
| மொத்தச் சொத்துகள் | 2,769,000 |
| நிகரச் சொத்துகள் | 1,055,000 |

**கணக்காய்வாளரால் இனங்காணப்பட்ட ஏனைய விடயங்கள் :**

- அட்டுறுவாகாத கடந்த மாதத்திற்கான வங்கிக் கடன் வட்டிச் செலவினம் ரூபா 2,050,000/- ஆக இருந்தது.
- வட்டி வருமானம் ரூபா 313,000/- இனால் மிகைப்படுத்திக் குறிப்பிடப்பட்டிருந்தது (over-stated).
- பின்வரும் உறவுமுறைத் தரப்பினர் ஊடுசெயலானது நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை:
    - உறவுமுறைத் தரப்பினருக்குச் செய்யப்பட்ட விற்பனை – ரூபா 200,000/-.

கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட்ட பெறுவனவுகளை விற்பனைகளாக தவறாகப் பதிவு செய்திருப்பதானது முகாமை சம்பந்தப்பட்ட ஒரு மோசடி காணப்படலாம் என்பதற்கான ஒரு மோசடி இடர் குறிகாட்டி எனக் கணக்காய்வாளர் கருதுகிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **Malcom PLC** இன் கணக்காய்வு நடைமுறைகளை ஆற்றும்போது விசேட கவனம் தேவைப்படுகின்ற ஐந்து (05) பகுதிகளை (areas) **அடையாளங் காண்க.** (05 புள்ளிகள்)

(b) நியாயமான உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலானது மட்டுப்படுத்தப்பட்ட உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலில் இருந்து எங்ஙனம் வேறுபடுகின்றது என்பதை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) **Malcom PLC** இன் கணக்காய்வுக்குத் திட்டமிடல் ஏன் முக்கியமானது என்பதற்கான நான்கு (04) காரணங்களைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(d) (i) மோசடியான நிதி அறிக்கையிடல் என்பதால் கருதப்படுவது யாதென **விபரிக்குக.** (02 புள்ளிகள்)

(ii) மோசடியைத் தடுத்தல் மற்றும் கண்டறிதல் தொடர்பில் **Malcom PLC** இன் முகாமையின் பொறுப்பினை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(e) **Malcom PLC** இன் முகாமை மற்றும் ஆளுகை பாரப்படுத்தப்பட்டோருக்கு தெரிவிக்க வேண்டிய மூன்று (03) விடயங்களை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

பகுதி C முடிவு

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| அறிவு (1) | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | வரைக (Draw) | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | தொடர்புபடுத்துக (Relate) | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | கூறுக/ குறிப்பிடுக(State) | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | அடையாளங்காண்க / இனங்காண்க (Identify) | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | நிரற்படுத்துக / பட்டியலிடுக (List) | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | ஏற்பிசைவு செய்க (Recognize) | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret) | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | விளக்குக (Describe) | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | விபரிக்குக (Explain) | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define) | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile) | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | வரைக (Graph) | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | மதிப்பிடுக (Assess) | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | தீர்க்குக (Solve) | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | தயாரிக்குக (Prepare) | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate) | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | கணிக்குக / கணிப்பிடுக (Calculate) | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | பிரயோகிக்குக (Apply) | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | தொடர்பாடுக(Communicate) | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | சுருக்கமாகக குறிப்பிடுக(Outline) | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | வேறுபடுத்துக (Contrast) | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss) | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate) | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | பகுப்பாய்வு செய்க (Analyze) | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |